## ஜயபஹளு இறங்குதுறைக் கம்பனி -2015

-----------------------------------------------

ஜயபஹளு இறங்குதுறைக் கம்பனியின் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்தக் கணக்காய்வை மேற்கொள்வதற்காக பகிரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியாக இருந்தது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன்என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஜயபஹளு இறங்குதுறைக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.2 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியினாலும் செயலாற்றல் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு செயலாற்றல் அறிக்கை தயாரித்து பணிப்பாளர் சபையின் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறான செயலாற்றல் அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.1.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியினாலும் கூட்டிணைந்த திட்டமொன்று (Corporate Plan) தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனி அவ்வாறான திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை. |
| (iii) 5.1.2 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியினாலும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று (Action Plan) தயாரிக்கப்பட்டு அதனுடன் தொடர்பான வேலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறான திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை. |
| (iv) 7.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சூழலின் பிரதான பிரிவொன்றாக சகல பிரதான செயற்பாடுகளையும் மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட செயற்கை நூல் (Procedure Manual / System) தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனி அவ்வாறான செயல் கைநூலொன்றைத் தயாரித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (v) | 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழு கூட்டப்பட்டு உள்ளகக் கணக்காய்வால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் செயல்நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு உரிய பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபிக்காதிருந்ததுடன் கணக்காய்வுக் குழுக்கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 9.3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியினாலும் ஒவ்வொரு பதவிக்காகவும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று (Schemes of Recruitment) தயாரித்து அதற்கு வரிசை அமைச்சின் அங்கீகாரமும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டையும் பெறவேண்டியிருந்த போதிலும் கம்பனியில் காணப்படுகின்ற பதவிகளுக்காக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அதற்குரிய தரப்பினரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பந்தி | பெறுமதிசேர் வரி செலுத்துதல் தொடர்பாக மாதாந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி தொடர்பாக மாதாந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 36.8 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 29.8 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7 மில்லியன் அதாவது 23 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 56,653,921 ஆகக் காணப்பட்ட இலாபம் அதன் பின்னரான ஆண்டுகளின் போது தளம்படைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 36,805,921 வரை குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 195,496,703 ஆகக் காணப்பட்ட நிறுவனத்தின் பங்களிப்பு தளம்பல் அடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 169,783,722 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

துறைமுக அதிகாரசபையின் விடயப் பொறுப்பு அமைச்சரால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் துறைமுக அதிகாரசபையினால் கம்பனிக்கு ஏற்கனவே கையளிக்கப்பட்ட பணிகள் மற்றும் இலக்குகள் மற்றும் நியதிகளின் பிரகாரம், ஜயபஹளு இறங்குதுறையின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தை நடாத்திச் செல்வது கம்பனியின் பிரதான நோக்கமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஜயபஹளு இறங்குதுறையின் செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | ஏற்றப்பட்ட கப்பல் எண்ணெய் வகை | | | இறக்கப்பட்ட கப்பல் எண்ணெய் வகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.எப்.ஓ 180 மெ.தொன் | எச்.எப்.ஓ 380 மெ.தொன் | மெரய்ன் எரிவாயு எண்ணெய் மெ.தொன் | ஐ.எப்.ஓ 180 மெ.தொன் | எச்.எப்.ஓ 380 மெ.தொன் | கப்பல் எரிவாயு எண்ணெய் மெ.தொன் |
| 2015 | 38,172 | 347,143 | 50,714 | 36,377 | 538,750 | 50,274 |
| 2014 | 46,083 | 226,153 | 61,402 | 118,131 | 243,460 | 61,997 |
| 2013 | 31,817 | 185,377 | 54,450 | 31,147 | 179,001 | 44,795 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் ஐஎப்ஓ (IFO 180) வகையில் எண்ணெய் ஏற்றுதல் (Lordiy) 17 சதவீதத்தினாலும், கப்பல் எரிவாயு எண்ணெய் (Marine Gas Oil) வகையில் எண்ணெய் ஏற்றுதல் 17 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் ஐஎப்ஓ (IFO 180) வகையில் எண்ணெய் இறங்குதல் 24 சதவீதத்தினாலும் கப்பல் எரிவாயு எண்ணெய் (Marine Gas Oil) வகையில் எண்ணெய் இறங்குதல் 19 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் நிறுவனக் கட்டமைப்பின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 65 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாக இருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 89 ஆனமையால் 24 பதவியணியில் மிகையொன்று காணப்பட்டது. அவ்வாறே நிறுவகக் கட்டமைப்பிற்காக வரிசை அமைச்சினதும் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாமை |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை. |